1987 நவம்பர் 13] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இது பற்றி விவரத்தைத் தந்தார்கள். அதன் அடிப்படையில் ஆராயும்படி கோரப்பட்டு இருக்கிறது. ஆராய்ந்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர வேறு அல்ல. அவருடைய மகனுக்கு இதுவரையில் கொடுக்கப்படவில்லை என்பதையும், விசாரணை செய்து நியாயம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) குமரி மாவட்ட ரப்பர் கழகத் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் கழக தோட்டங்களில் 3 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் 20—10—1987 முதல் வேலை நிறுத்தம் செய்து வருவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

குமரி மாவட்டத்திலுள்ள அரசு ரப்பர் தோட்டக் கழகத்தில் பணியாளர்கள் உட்பட மொத்தம் சுமார் 3000 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். இந்நிறுவனத்தில் (1) குமரி எஸ்டேட் ஒர்க்கர்ஸ் யூனியன் (ஐ.என்.டி.யு.சி. இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ்), (2) குமரி எஸ்டேட் ஒர்க்கர்ஸ் யூனியன் (டி.என்.டி.யு.சி. தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரஸ்), (3) கன்னியாகுமரி டிஸ்டிரிக்ட் எஸ்டேட் ஒர்க்கர்ஸ் யூனியன் (சி.ஐ.டி.யு.சி-இந்திய தொழிற் சங்கங்களின் மையம்), (4) குமரி தோட்ட தொழிலாளர் நலச் சங்கம், (5) அண்ணா தோட்டத் தொழிலாளர்கள் சங்கம் (அண்ணா தொழிற் சங்கப் பேரவை) மற்றும் (6) கன்னியாகுமரி டிஸ்டிரிக்ட் தோட்ட தொழிலாளர் முன்னேற்ற சங்கம் (தொழிலாளர் முன்னேற்ற பேரவை) ஆகிய தொழிற்சங்கங்கள் இயங்கி வருகின்றன.

2. இந்நிறுவனத் தொழிலாளர்கள் 1986-87-ம் ஆண்டுக்கு 20 சதவிகிதம் போனசும் கருணைத் தொகை ரூ. 500-ம் கோரி 19/20—10—1987 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

3. இத்தாவா குறித்து திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு பேச்சு வார்த்தைகள் நடந்ததைத் தொடர்ந்து 3—11—87, 4—11—87, 5—11—87 மற்றும் 6—11—87 ஆகிய தேதிகளில் தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்பு சென்னையில் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன. 6—11—87 அன்று நடைபெற்ற சமரசப்

பேச்சு வார்த்தைகளின் போது 8.33 சதவிகிதம் போனசும், பிடித்தம் செய்யும் தொகையாக ரூ. 100—ம் கொடுப்பதாக நிர்வாகம் ஒப்புக் கொள்ள, அதை ஏற்றுக் கொண்டு, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை கைவிட்டு 9—11—87 முதல் வேலைக்கு திரும்புவதாக சம்மதித்து, தொழிற் தகராறு சட்டப்பிரிவு, 12(3)-ன் கீழ் தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்), சென்னை, முன்னிலையில் ஒரு முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை கைவிட்டு 9—11—87 முதல் வேலைக்குத் திரும்பினர். நிறுவனத்தில் தற்போது சகஜநிலை நிலவி வருகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்ட நேரத்தில் வேலை நிறுத்தம் நடந்து வந்தது. ஆனால் அமைச்சரால் கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதுபோல, ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு அவர்கள் வேலைக்கு சென்றிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து எழுப்பப்பட்டிருக்கக் கூடிய ஒரு பிரச்சினையை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அதை ஒரு கேள்வியாகக் கேட்கிறேன்.

100 ரூபாய் கொடுப்பதாக நிர்வாகம் ஒத்துக் கொண்டுள்ளது என்று சொல்லப்பட்டிருப்பது உண்மைதான். அதை எப்படி பிடித்தம் செய்வது என்பது சம்பந்தமாக தொழிலாளர் துறை இணை ஆணையர் முன்னாடி பேசி முடித்துக் கொள்ளலாம் என்று ஒப்பந்தத்திலே ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. மாநில அரசு எடுத்துள்ள பல நிறுவனங்களிலே லாபம் ஏற்படாமல் இருந்தாலும் கூட தீபாவளியை ஒட்டி கருணைத் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் 20 சதவிகிதம் போனஸ் பெற்றிருக்கிறார்கள். தனியார் தோட்டத் தொழிலாளர்கள் எப்படி உற்பத்தி செய்கிறார்களோ அப்படித்தான் இந்தத் தோட்டத்திலே பணி புரிகிற தொழிலாளர்களும் உற்பத்தி செய்கிறார்கள். என்பது துறையின் பொறுப்பிலே இருக்கிற அமைச்சருக்கு நன்கு தெரியும். ஆகவே தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுக்கு கருணைத் தொகை கொடுத்திருப்பதைப் போல இங்கும் கொடுக்கலாம் என்று சிபாரிசு செய்திருப்பதைக் கருத்தில் கொண்டு, பொங்கல் நேரத்திலே கூட அவர்களுக்குப் பொங்கல் பரிசு வழங்கப்படவில்லை என்பதையும் கருத்தில் கொண்டு, கொடுத்த இந்த 100 ரூபாயை பிடித்தம் செய்யாமல் இருப்பதற்கு, அதை கருணைத் தொகையாக மாற்றிக் கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை நிறுத்தம் தொடர்பாக இந்தக் கவன ஈர்ப்பு தீர்மானம். அது முடிவுற்று விட்டது என்று பதில் தெரிவித்து இருக்கிறேன். அதற்கு மேலும் ஏதாவது

1987 நவம்பர் 13] [திரு. ஆர். எம். வீரப்பன்]

கேட்க வேண்டிய கேள்விகள் இருந்தால் அந்தத் துறை சம்பந்தப் பட்ட அமைச்சரிடத்திலே கேட்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) திருவில்லிபுத்தூரில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தெளிவாகத் தெரியாதது குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையத்திலிருந்து அஞ்சல் செய்யப்படும் நிகழ்ச்சிகள் திருவில்லிபுத்தூர் நகரில் தெளிவாக தெரியாததால் அப்பகுதி மக்களின் கவலை குறித்த'' அவரசப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

கொடைக்கானலில் உயர் சக்தி கொண்ட (10 கிலோவாட்) தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை தொலைக் காட்சி நிலைய நிகழ்ச்சிகளை அப்பகுதியிலுள்ள மக்களும் காணும் வகையில் சென்னை—கொடைக்கானல் நுண் அலை தொடர்பு (Micro Wave Link) ஏற்படுத்தப்பட்டு இந்த அஞ்சல் நிலையம் 14–1–1987 முதல் செயல்பட்டு வருகிறது.

கொடைக்கானலைச் சுற்றியுள்ள 150 கிலோமீட்டர் தூரம் வரையில் வசிக்கும் மக்களும், நில அமைப்பு மற்றும் பருவ நிலையைப் பொறுத்து அதற்கு மேற்பட்ட தூரத்தில் இருக்கும் சில இடங்களில் உள்ளவர்களும் சென்னை தொலைக்காட்சி நிலைய நிகழ்ச்சிகளை காண முடிகிறது. ஆனால் மலை மறைவுப் பகுதிகளில் இவ்வஞ்சல் தெரிவதில்லை. அண்ணா, மதுரை ஆகிய மாவட்டங்களில் முழுமையாகவும், இராமநாதபுரம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, காமராசர் மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும் தொலைக்காட்சி ஒளிபரப்பு திருப்திகரமாக உள்ளது (Satisfactory Reception) என்று தொலைக்காட்சித் துறையினர் தெரிவித்துள்ளனர்.